[1970 மார்ச் 24

இணைப்பு 1.

[360-ம் பக்கத்தில் 510-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

விவர அறிக்கை.

திரு. ஆர். ஏ. கோபால்சுவாமி, ஐ.சி.எஸ். (ஓய்வு பெற்றவர்) அவர்களைத் தலைவராகவும், திருவாளர்கள் எஸ். கோவிந்தசாமி நாதன், அரசுத்தலைமை வழக்கறிஞர், சென்னை, ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., எம். சந்திரசேகரம் பிள்ளை, ஐ.ஏ.எஸ். (ஓய்வு பெற்றவர்) ஆகியவர்களை உறுப்பினர்களாகவும், திரு. என். கிருஷ்ணசாமி, ஐ.பி.எஸ்., காவல் துறையின் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல், ரெயில்வே-படைக்கலந்தாங்கிய காவலர்படை, சென்னை அவர்களை உறுப்பினர்-செயலாளராகவும் கொண்ட காவல்துறை ஆணைக்குழு ஒன்றை 20—12—1969 நாளிட்ட பொது (ஜெனரல்-துறையின் அரசு ஆணை எண். 3113-ல் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.

பின்வருவன குறித்து மாநிலக் காவல்துறை ஆணைக்குழு ஆய்வு செய்து பரிவுரைகள் அனுப்பும் :—

(1) காவல் படையினரின் சம்பளம், படிகள்-ஒரு இசைவான முடிவு எடுப்பதற்காக காவல்துறை ஆணைக்குழுவும் சம்பள ஆணைக்குழுவும் சேர்ந்து இது குறித்து பரிசிலனை செய்யும்.

(2) பணியின் பொது நிலைமைகள், வீட்டு வசதி, காவலர் நலன்.

(3) காவல் படையின் அதிகாரங்கள், கடமைகள், (அ) சட்டம், ஒழுங்கு இவற்றை நிலை நிறுத்துதல், (இ) குற்றத்தை தடுத்தல், புலனாய்வு செய்தல், (உ) போக்குவரத்தை கட்டுப்படுத்துதலும் முறைப்படுத்துதலும், (எ) வேவுத் தகவல் சேகரித்தல், (ஒ) காவலர்களின் பிற கடமைகள் பழையனவும், புதியனவும் ஆகியவற்றிற்குத் தொடர்பானவற்றில் காவல் படையின் செயல் திறனை மேம்படுத்துதல்.

(4) காவல் படையின் அமைப்பையும், நடைமுறைகளையும் தற்காலத்துக்கேற்றவாறு மாற்றி அமைத்தல்; புலனாய்வு செய்வதற்கு வேண்டிய வசதிகள்; புள்ளி விவரங்களும் ஆவணங்களும்; ஆராய்ச்சியும், திட்டம் தீட்டுதலும்.

(5) சிறப்பாகப் போக்குவரத்தையும், செய்தித் தொடர்பையும் ஒட்டி மனிதத்திறன், மேற்பார்வை, சாதனங்கள் ஆகியவற்றைக் குறித்த அளவுகளை முடிவு செய்தல்.

(6) தகுதிகளும், படைக்குப் புதிய ஆள் சேர்த்தலும், பயிற்சியும், வேலை வாய்ப்பும், அதிகாரங்களையும் மேலாதிக்கத்தையும் பிரித்துக் கொடுத்தல், செயல் நிறைவேற்றுதலையும், பதவி உயர்வையும் மதிப்பிடுதல்.

1970 மார்ச் 24]

(7) பொது மக்களுடன் தொடர்பு, அரசியல் அமைப்புகள், தொழிலாளர், உழவர்குலம், மாணவர்கள், அச்சகம் போன்ற சமுதாயத்தின் சிறப்புப் பிரிவுகளுடன் தொடர்பு, காவலருக்கு எதிரான புகார்களும் குறைகளும்.

(8) காவலர், நீதி மன்றங்கள், மாஜிஸ்டிரேட்டுகள் ஆகியோருக்கிடையேயும் பொது நிர்வாகத்துறை, பிற அரசு துறைகளுக்கிடையேயும் ஒருங்கிணைந்த தொடர்பை ஏற்படுத்துதல்.

(9) மாநிலங்களின் காவலர் அமைப்புகளுக்கும் இந்திய அரசின் காவலர் அமைப்புகளுக்குமிடையே ஒருங்கிணைந்த தொடர்பு ஏற்படுத்தல்.

(10) ஆணைக்குழு முக்கியமெனக் கருதும் காவலர் பணியின் பிற கூறுகள்.

In G.O. Ms. No. 3113, Public (General-A) Department dated 20th December 1969, the Government of Tamil Nadu constituted a Police Commission consisting of Thiru R. A. Gopalaswami, I.C.S. (Retd.) as Chairman, Thiruvalargal S. Govind Swaminadhan, Advocate-General, Madras, M. P. Sivagnanam, M.L.A., M. Chandrasekaram Pillai, I.A.S. (Retd.) as Members and Thiru N. Krishnaswamy, I.P.S., Deputy Inspector-General of Police, Railways and Armed Police, Madras, as Member-Secretary.

The State Police Commission will go into and make recommendations on—

(i) Pay and allowances of Police Force.

This will be discussed at joint sittings of the Police Commission and the Pay Commission with a view to arriving at an agreed decision.

(ii) General conditions of service, housing and welfare.

(iii) Powers and duties of the Police Force, and improvement of its efficiency in relation to :

(*a*) Maintenance of Law and Order;

(*b*) Prevention and detection of crime;

(*c*) Control and regulation of traffic;

(*d*) Collections of intelligence; and

(*e*) Other Police duties, old and new.

(iv) Modernisation of organisation and methods; investigational facilities, statistics and records, research and planning;

(v) Yardsticks of Manpower and supervision as well as equipment with a special reference to transport and communications;

(vi) Qualifications and recruitment, training and placement, delegation of powers and control as well as assessment of performance and promotions;

[1970 மார்ச் 24

(vii) Public relations and relationship with special sections of the community like political organisations, labour, peasantry, students, press, etc., complaints and grievances against the Police;

(viii) Co-ordination between the Police, the courts and magistracy, general administration department and other Government departments;

(ix) Co-ordination between the Police organisations of the States and the Government of India; and

(x) Any other aspect of Police work which the Commission considers important.

இணைப்பு 2.

363ம் பக்கத்தில் 513-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

நகர்ப் பகுதி ஒன்றுக்காகத் தயாரிக்கப்படும் இடைக்கால வளர்ச்சித் திட்டம், வருங்கால மக்கள் தொகைக்குத் தேவைப் படக்கூடிய நிலங்கள் பற்றி கவனமாக ஆய்ந்து தயாரிக்கப்பட்ட மதிப்பீடாக இருக்கவேண்டும். நகர்ப்பகுதி வளர்ச்சி எந்த முறையில் அமையவேண்டும் என்பதை அத்திட்டம் தெளிவாகக் காட்ட வேண்டும். நகர்ப்பகுதி மக்கள் நல்ல முறையில் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலை அப்பொழுதுதான் அமைய முடியும். நிலங்கள் வாங்குவதற்கான செலவு, அதிலிருந்து கிடைக்கும் வருவாய் ஆகியவற்றிடையே ஏற்றத்தாழ்வற்ற சமநிலை அமைந்திருப்பதற்காக நிலம் மிகவும் சிக்கனமான முறையில் கையாளப்படுவதற்கும் இத்திட்டம் வகைசெய்யவேண்டும். உள்ளூர் மக்களின் விருப்பங்களுக்கேற்பவும், நோக்கங்களையொட்டியும், இத்திட்டம் அமைவதுடன், நகரமக்களின் சுகாதாரம், பாதுகாப்பு, வசதி ஆகியவை குறித்துப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளையொட்டியும் அமைந்திருக்க வேண்டும்.

2. சென்னை மாநகரப் பகுதிக்கான வளர்ச்சித் திட்டத்தின் வரைவு இரு முக்கியப் பகுதிகளைக் கொண்டதாகும்—

(1) சென்னை நகர்ப்புற பகுதி.

(2) சென்னை மாநகரப் பகுதி.

சென்னை மாநகரின் தற்போதைய மாநகராட்சி எல்லைகளுக்குள் உள்ள எல்லா நிலங்களும் கீழே கண்டுள்ள கிராமங்களும் சென்னை நகர்ப்புறப் பகுதியில் அடங்கும் :—

1. கொடுங்கையூர்.	9. விருகம்பாக்கம்.
2. எருக்கஞ்சேரி.	10. சாலிகிராமம்.
3. குளத்தூர்.	11. கோடம்பாக்கம்.
4. குன்னூர்.	12. நேசபாக்கம்.
5. வில்லிவாக்கம்.	13. வேளச்சேரி.
6. திருமங்கலம்.	14. தாராமணி.
7. கோயம்பேடு.	15. கனகம்.
8. செஞ்சேரி.	16. திருவான்மியூர்.